10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

எதிரொ

குரல் 01 அதிர்வு 335 செவ்வாய்க்கிழமை 24 ஏப்ரல் 2018 ethirolim 021 224 38 18



# ஜே.வி.பியும் உடைந்தது

கொழும்பு, ஏப்.24

மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) கட்சி, அநுரகுமார தலைமையில் ஒரு குழுவாகவும், லால் காந்த தலமையில் இன்னொரு குழுவாகவும் இரண்டாகப் பிளவுபட்டுள்ளதாக இலங்கையின் பிரபல பாடகர் மதுமாதவ அரவிந்த தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக, முன் 06▶

# இலங்கைக்கு சுனாமி ஆபத்தா?

கொழும்பு, ஏப்.24

இலங்கைக்கு அருகே தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதால் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, உயரமான அலைகள் தோன்றுவதாகவும், எனினும் சுனாமி ஆபத்து ஏற்படாது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடல் மட்டம் திடீரென அதிகரிப்பதுடன், கடல் அலைகள் உயரமாக மேல் எழும்ப வாய்ப்புள்ளதாக வளிமண்டல 06▶




# வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

சாவகச்சேரி, ஏப்.24

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் வாள் வெட்டுக்குழுவினரால் ஒரே இரவில் மூன்று வீடுகள் மீது தாகுதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், அந்தப் பகுதி மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர்.

நேற்றுமுன் தினம் இரவு 11 மணி முதல் அதிகாலை 5 மணி வரை இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மட்டுவில் தெற்கில் உள்ள கிராம சேவையாளர் ஒருவரின் வீட்டின்மீது இரவு 11 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப் 06▶

# போன மைத்திரி திரும்பி வந்தார் வெறுங்கையோடு!

கொழும்பு, ஏப்.24

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க பிரிட்டனுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய நாடுகளின் உயர்மட்டத் தலைவர்களுடன் எந்த அதிகாரபூர்வ பேச்சுக்களையும் நடத்தாமலேயே வெறுங்கையுடன் நாடு திரும்பியுள்ளார். 06▶

## 50 படகுகளில் சென்ற மக்கள்



# இரணைதீவில் அதிரடி தரையிறங்கிப் போர்!

கிளிநொச்சி, ஏப்ரல் 24

கிளிநொச்சி இரணைதீவு மக்கள் நேற்று அதிரடியாகப் படகுகளில் தங்கள் சொந்த இடத்துக்குச் சென்று தரையிறங்கி, அங்கிருந்தவாறே நிலமீட்புப் போரைத் தொடர்ந்து முன்னெடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச செயலக பிரிவில் உள்ள இரணைதீவு மக்கள் தங்களின் சொந்த நிலத்துக்குச் செல்ல வேண்டும் என வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம் நேற்றுடன் 359 ஆவது நாளை எட்டியது. இதனையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 50 க்கும் மேற்பட்ட படகுகளில் தங்களது சொந்த நிலமான இரணைதீவில் தரையிறங்கி, அங்கு போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்றுக் காலை இரணைமாதா நகரிலிருந்து மக்கள் மீன்பிடிப் படகுகளில், அருட்தந்தையர்களுடன் இரணைதீவுக்கு சென்று தேவாலயத்தில் வழிபட்ட பின்னர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். 06▶



# மின்னல் வேகம்: இளைஞர் சாவு

யாழ்ப்பாணம், ஏப்.24

அதிவேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதியதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்தார். அதில் பயணித்த இன்னொரு இளைஞர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.தென்மராட்சி ஏ - 35 வீதியில் நாவற்குழி மகாவித்தியாலயத்துக்கு அருகாமையில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில், 06▶

# சீன இராணுவத்தளமா? சீச்சீ! அதெல்லாம் பொய்!!

## மறுக்கிறார் ரணில்

கொழும்பு, ஏப்.24

"அம்பாந்தோட்டையில், சீன இராணுவத் தளமொன்று அமைக்கப்படப்போவதாக வெளியான செய்திகள் தவறானவை. அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு நடைமுறைகள் எப்போதும் இலங்கைக் கடற்படையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும்" என்று பிரதமர் 06▶



# புத்தர் சிலையால் மூடப்பட்டது வளாகம்

## வவுனியாவில் பதற்றம்

வவுனியா, ஏப்.24

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் சிங்கள மாணவர்கள் புத்தர் சிலையை வைப்பதற்கு மேற்கொண்ட முயற்சியை வளாக நிர்வாகம் தடுத்தமை யால் அங்கு பதற்ற நிலை தோன்றியுள்ளது. 06▶

## எதிர்க்கட்சித் தலைவரின்

# பதவி பறிபோகாது!

கொழும்பு, ஏப்.24

"ஒன்றிணைந்த எதிரணியினர் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து முழுமையாக வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தால் 06▶

# மாண்ட பெண் மீண்டார்

## நுவரெலியாவில் பரபரப்பு

கொழும்பு, ஏப்.24

நுவரெலியாவில் களுகங்கையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டு, நல்லடக்கம் செய்யப்பட்ட பெண்ணொருவர் மீண்டும் உயிருடன் 06▶



# பளையில் - புலிப் பதுங்கு குழி கண்டுபிடிப்பு

கிளிநொச்சி, ஏப்.24

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி, அரசர்கேணி பகுதியில் விடுதலைப்புலிகள் பயன்படுத்தியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலக் கீழ் பதுங்கு குழி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனியார் ஒருவரின் காணியில் உள்ள குறித்த பதுங்கு குழியை அந்தக் காணியின் உரிமையாளர் கண்டு பிடித்து, இராணுவத்தினருக்கு அது குறித்து 06▶

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 24 ஏப்ரல் 2018

# நீங்கள் செய்தால் சரி நாங்கள் செய்தால் தவறா?

## முன்னணியிடம் சிவசக்தி ஆனந்தன் கேள்வி

வவுனியா, ஏப்.24

" யாழ். மாநகர சபை உள்ளிட்ட சில சபைகளில் பிற கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியமைப்பதற்காக இரகசிய வாக்களிப்பைக் கோரிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, நாங்கள் பிற கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியமைத்ததை விமர்சிப்பது எந்த விதத்தில் நியாயம்?" என்று ஈ.பி.ஆர்.எல்.எப்பின் செயலாளரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.



தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பினர் வவுனியா நகரசபைத் தலைவர் பதவியில் வெற்றியீட்டியமை தொடர்பில் முன்வைக்கப்படும் விமர்சனங்களுக்குப் பதில் அளிக்கும் வகையில், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஐக்கியத் தேசியக் கட்சி, சுதந்திரக்கட்சி மற்றும் ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் ஆதரவளித்திருந்த நிலையில், வவுனியாவில் இதில் மாற்றங்கள் ஏற்படலாம் என்ற கருத்து மிகவும் பலமாக இருந்தது. இதனால், வவுனியா நகரசபை தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் கைகளுக்குச் சென்றுவிடுமோ என்ற அச்சம் சிவில் சமூகங்களுக்கு ஏற்பட்டது. ஆகவே, இறுதி நேரத்தில் நாங்கள் போட்டியிடுவதன் காரணமாக தென்னிலங்கை கட்சிகளுக்கான பலம் குன்றும் என்ற காரணத்தால் ஏனைய தமிழ் கட்சிகள் வெற்றியடைவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால், மூன்று அல்லது நான்கு உறுப்பினர்களுடன் நாங்கள் தலைவர் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவோம் என்று எதிர்பார்க்கவில்லை.

ஆனால், வவுனியா நகரசபையைப் பொறுத்தவரையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு இடையிலான முரண்பாடும், தமிழரசுக் கட்சிக்குள்ளேயே எழுந்திருக்கக்கூடிய உட்கட்சிப் பூசல்களும், ஈ.பி.டி.பியினருக்கும் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் நிலவிய முரண்பாடும், தென்னிலங்கை அரசியல் கட்சிகளுடனான முரண்பாடும் எம்மை வெற்றியடையச் செய்தன. அதேநேரம் ஏனைய மூன்று சபைகளிலும் செட்டிகுளத்தில் சுதந்திரக் கட்சி வெற்றியீட்ட, ஏனைய இரு சபைகளிலும் தமிழரசுக் கட்சி மயிரிழையில் வெற்றிபெற்றது. ஏனைய சபைகளில் நாங்கள் போட்டியிட்டபோதிலும்கூட அங்கு எமக்கு போதிய ஆதரவை வழங்க யாரும் முன்வரவில்லை என்பதை அனைவராலும் புரிந்துகொள்ள முடியும்.

ஆகவே, தேசியக் கட்சிகளுடன் உறவு வைத்தோம்: தேசியக் கட்சிகளுடன் இணைந்துவிட்டோம். பிறேமச்சந்திரன் சொன்ன சொல்லில் இருந்து பின்வாங்கிவிட்டார் என்று சொல்வதில் எத்தகைய உண்மையும் இல்லை. இவ்வாறான ஒரு சிந்தனை தெளிவற்ற அணுகுமுறைகளைக் கையாண்டுகொண்டு வவுனியா நகரசபையைக் காப்பாற்றி தமிழர் வசம் ஒப்படைத்ததற்காக எம்மீது வைக்கும் குற்றச்சாட்டுக்கள் அர்த்தமற்றவையும் அநாகரிகமானவையும் ஆகும்." என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஆ)

## பேராதனைப் பூங்காவுக்கு வருமானம் அதிகரிப்பு



கண்டி , ஏப்.24

பேராதனை தாவரவியல் பூங்காவுக்கு சுற்றுலாப் பயணிகள் மூலம் நான்கு கோடியே 20 இலட்சம் ரூபா வருமானம் கிடைத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனை தாவரவியல் பூங்காவைப் பார்வையிடுவதற்காக கடந்த பெப்ரவரி மாதத்தில் உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் 98 ஆயிரத்து 411 பேரும், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் 58 ஆயிரத்து 154 பேரும் வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## இலங்கைக்கு 94 ஆவது இடம்

கண்டி , ஏப்.24

உலகில் வீலுவான கடவுச் சீட்டுப்பட்டியலில் இலங்கைக்கு 94 ஆவது இடம் கிடைத்துள்ளது.

'Global passport power rank index 2018' என்ற பட்டியலில் வெளியிடப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

விசா வழங்கலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில், இலங்கைக்கு 39 புள்ளிகள் கிடைத்துள்ளன.

2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கு அமைவாக இந்த முறையும் உலகின் காத்திரமான கடவுச்சீட்டுக்கான முதலிடத்தை சிங்கப்பூர் பெற்றுக்கொண்டுள்ளது. இதற்கு 164 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

58 புள்ளிகளைப் பெற்று இந்தியா 76 ஆவது இடத்தையும், 25 புள்ளிகளைப் பெற்று ஆப்கானிஸ்தான் 100ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. (ஆ)

## கொழும்பு நகரத்தின் பரப்பளவில் மாற்றம்

கொழும்பு, ஏப்.24

இரண்டு தசம் ஆறு - ஒன்பது (2.69) கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ள கொழும்பு நகரம், தற்போது முன்னெடுக்கப்படும் போட் சிற்றி திட்டத்துக்கு அமைவாக இரண்டு தசம் ஆறு-ஒன்பது (2.69) கிலோ மீற்றர் பரப்பளவாக மாற்றம் அடைய உள்ளது என்று நில அளவையாளர் பி.எம்.பி. உதயகாந்த தெரிவித்தார்.

போட் சிற்றி திட்டத்துக்கு உட்பட்ட நிலப்பரப்பை அளவீடு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களம் இந்த அளவீட்டுப் பணியை மேற்கொண்டுள்ளது.

"இந்தப் பணிகள் நிறைவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட பகுதியை வரைபடத்துக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் கையளிக்கப்படும். இந்த நிலப்பரப்பை சட்டரீதியாக்கும் பொருட்டு அதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும். இந்தப் பணிகளை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொள்ளும்." என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஆ)

## அச்செழுவில் மரநடுகை



யாழ்ப்பாணம், ஏப். 24

சர்வதேச புவித் தினத்தை முன்னிட்டு மரநடுகை நிகழ்வு அச்செழு ஞானவைரவர் அண்ணமார் ஆலய முன்றலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அச்செழு இளைஞர் கழகத் தலைவர் ஈ.துசந்தன் தலைமையில் ஆரம்பமானது.

இந்த நிகழ்வில், கோப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ர.பகீரதன், அச்செழு ஞானவைரவர் அண்ணமார் ஆலய தலைவர் இ.புஷ்பாகரன், அச்செழு இளைஞர் கழகத்தின் ஆலோசகர்கள் ம. ஈஸ்வரன், சி.சதாநந்தன், அச்செழு இளைஞர் கழகத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மரங்களை நாட்டினர்.

## நாடு திரும்பினார் ஜனாதிபதி



கொழும்பு, ஏப்.24

இங்கிலாந்தில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட தூதுக்குழுவினர், தமது விஜயத்தை முடித்துக்கொண்டு, நேற்றுக் காலை 9.45 மணிக்கு நாடு திரும்பி உள்ளனர். (ஆ)

## நூல் அறிமுக விழா







யாழ்ப்பாணம், ஏப்.24

இந்திய பத்திரிகையாளர் தி.ராமகிருஷ்ணனின் 'ஓர் இனப்பிரச்சினையும் ஓர் ஒப்பந்தமும்' நூல் அறிமுக விழா யாழ்முகாமையாளர் சங்கத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

வட மாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் அறிமுக நிகழ்வில், வாழ்நாள் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, பொறியியல் கலாநிதி க.விக்னேஸ்வரன், ஈ.பி.ஆர்.எல்.எப்பின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வட மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் நூல் ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் துணைச் செயலர் இ.கிருஷ்ணாநந்தன் ஆகியோர் கருத்துரைகளையும் வழங்கினர். (ஆ-4)

## திகன வன்முறை மறியல் நீடிப்பு



கண்டி, ஏப்.24

கண்டி- திகன பகுதியில் கடந்த மாதம் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மகாசோன் பலகாய அமைப்பின் தலைவர் அமித் வீரசிங்க மற்றும் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட 38 பேரின் விளக்கமறியலே இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்தேகநபர்களை தெல்தெனிய நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தியபோதே, இந்த விளக்க மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஆ)

எதிரொலி
Ethiroli
செவ்வாய், 24 ஏப்ரல் 2018 ethirolimedia@gmail.com

# குடாரப்பும் இரணைதீவும்

சாது மிரண்டால் காடு தாங்காது. அதனை நேற்று இரணைதீவில் உள்ள கடற்படையினர் நன்றாகவே உணர்ந்திருப்பார்கள்.

1992 ஆம் ஆண்டு படை நடவடிக்கை காரணமாக இரணைதீவில் வசித்து வந்த மக்கள் அனைவரும் கூண்டோடு இடம் பெயர்ந்து, தற்காலிகமாக இரணை மாதா நகரில் அகதி என்ற அடையாளத்தோடு வாழ்ந்து வந்தனர். என்னதான் இருந்தாலும் சொந்த நிலத்து வாழ்வு வாய்க்குமா? கிட்டத்தட்ட 25 வருடங்களுக்கும் மேலாக அகதிகளாக, சொந்த மண்ணை இழந்த, மக்கள் போர் முடிவுக்கு வந்த பின்னும் நிலமிழந்தவர்களாகவே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இப்போது அவர்களின் வாழ்வியலுக்கான ஆதாரம் அடிபட்டுப் போயிருந்தது. சொந்த நிலமின்மையால் வீட்டுத் திட்டங்களும் இல்லை. எல்லாமே அவர்களுக்கும் பூச்சியமாகத் தோன்றிய கணத்தில், என்ன வந்தாலும் தொடர்ந்து போராடிச் சொந்த மண்ணுக்குச் செல்வோம் என, இரணைதீவு மக்கள் முடிவெடுத்தனர். போராட்டம் ஆரம்பமாகியது.

பல வழிகளில் அந்த மக்கள் போராடிப் பார்த்தார்கள். மக்களிம் போராட்டம் உக்கிரம் பெறும் சமயங்களில் படையினரயும், பொலிஸாரையும் ஏவிவிட்டு அதனை அடக்கத்தான் அரசாங்கம் முனைந்ததே தவிர, அந்த அப்பாவி மக்களிடம் இருந்து பறித்தெடுத்த மண்ணையும், அந்த மண்ணுக்குள் புதைந்திருக்கும் இரணைதீவு மக்களின் வாழ்வியல் ஆன்மாவையும் திருப்பிக் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இருக்கவில்லை. அதேபோன்று தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் எந்தவொரு பிரகிருதியும் நிலத்துக்காகப் போராடும் இரணைத்தீவு மக்களுக்காக குரல் கொடுக்கவில்லை. 359 ஆவது நாள் போராட்டமும் விழலுக்கு இறைத்த நீராகப் போய்க்கொண்டிருப்பதை உணர்ந்த மக்கள் போராட்ட வழிமுறையை மாற்ற முற்பட்டனர். இதுவரை எந்தவித வன்முறையோ, சட்டவிரோதத் தன்மையோ இல்லாமல் அகிம்சை வழியே போராடியவர்கள், அடுத்த கட்டமாக தீவிரத்தனத்தோடு களமிறங்கினார்கள்.

"நாம் எந்த ஆயுதத்தை எடுக்க வேண்டுமென எமது எதிரியே தீர்மானிக்கிறான்" என்ற தேசியத்தின் வார்த்தைகளைக் கேட்டு வாழ்ந்த மக்கள், தமக்கான புதிய ஆயுதத்தைப் புலிகளின் வழியில் தெரிவு செய்தனர். ஆனையிறவுச் சமரின் போது , திருப்புமுனையாக அமைந்தது குடாரப்புத் தரையிறக்கமே. பிரிகேடியர் பால்ராஜ் தலைமையில் சுமார் 1200 போராளிகள், படகுகளில் சென்று படையினர் எதிர்பார்த்திராத வகையில் குடாரப்பில் தரையிறங்கி படையினருக்கான வழங்கல் பாதையைத் துண்டித்திருந்தனர். இந்த நடவடிக்கையை உலகின் அத்தனை இராணுவ வல்லுநர்களும் பிரமிப்போடு பார்த்தார்கள். இந்தத் தரையிறக்கமே " இனிமேல் எமது படைகள் வந்தாலும் கூட, ஆனையிறவைப் பிடிக்க முடியாது" என்று அமெரிக்க இராணுவப் படைத்தளபதிகளால் சொல்லப்பட்ட பாதுகாப்புப் பொறிமுறைகளைத் தகர்த்து, புலிகளின் காலில் ஆனையிறவை விழவைத்தது.

இப்போது அதே பாணியில் இரணைதீவுத் தரையிறக்கத்தைச் செய்துள்ளனர் நிலத்துக்காகப் போராடும் மக்கள். அரசும், அரசியல்வாதிகளும் கைவிட்ட அந்த மக்கள் தமக்கான வழியை தெரிந்தெடுத்துத் துணிச்சலாகப் போராடத் தொடங்கியுள்ளனர். அந்த மக்கள் இந்த வழியும் பயனற்றுப் போய் விபரீதமான அடுத்த போராட்ட முறைகளுக்குச் செல்லமுன்னர், மக்களின் காணிகளை அரசு விடுவிக்க வேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# சிவன் கோயிலை இடித்து கற்சிலைமடுவில் விகாரை

முல்லைத்தீவு, ஏப்.24

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் ஒரு ஏக்கர் தனியார் காணியில் கடந்த 2009ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த மிகவும் பழமை வாய்ந்த சிவன் ஆலயத்தினை இடித்துத் தரைமட்டமாக்கி, அந்த ஆலயத்தின் சான்றுப் பொருட்களை அழித்து, அப் பகுதியில் பௌத்த விகாரை ஒன்றினை இராணுவத்தின் 64ஆவது படைப்பிரிவினர் அமைத்து வருகின்றனர். இவ்விடயம் அப்பகுதியில் பெரும் பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளதாகக் காணியின் உரிமையாளரான கந்தையா சிவராசா (சமாதான நீதவான் ) தெரிவித்துள்ளார்.

"கற்சிலைமடுப்பகுதியில் நான் பரம்பரை பரம்பரையாக வசித்துவருகின்றேன். 1921ஆம் ஆண்டில் எழுதப்பட்ட உறுதிக்காணி யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், 2009ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலத்தில், இராணுவம் எனது காணியை கைப்பற்றி இராணுவ முகாமினை அமைத்தது. எனது காணிக்குள் மிகவும் பழமைவாய்ந்த சிவன் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது. இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட எனது காணியிலிருந்த சிவன் ஆலயத்தை கனரக வாகனத்தால் உடைத்து தரை மட்டமாக்கிவிட்டு, அங்கிருந்த வெள்ளரசு மரத்தடியில் பௌத்த விகாரையை அமைத்துள்ளனர்.

2009ஆம் ஆண்டு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு அப்பகுதியைச் சுற்றி 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளது. எனினும் கடந்த 2013ஆம் ஆண்டு தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தில் எனது காணி பாரப்படுத்தப்பட்டு, அதே வருடம் 6ஆம் மாதம் வர்த்தமானியில் தொபொருள் திணைக்களத்துக்குச் சொந்தமான பகுதியாக எனது காணி அறிவிக்கப்பட்டுவிட்டது. இதனால் எனது காணியை மீட்க முடியவில்லை. அத்துடன் அங்கு அமைக்கப்பட்ட விகாரையை விஸ்தரிக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்" எனவும் காணி உரிமையாளர் குற்றம் சாட்டியுள்ளார். (அ)

# பேஸ்புக் ஜனாதிபதி: கோத்தா வெற்றி!



கொழும்பு, ஏப்.24

இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார் என்ற கருத்துக் கணிப்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச முதல் இடத்தை பிடித்துள்ளார். பேஸ்புக் மூலம் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே கோத்தபாய இவ்வாறு வெற்றி பெற்றுள்ளார்.

அரசாங்கத்துக்கு ஆதரவான பேஸ்புக் பக்கம் ஒன்றினால் இந்தக் கருத்து கணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, எட்டாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளார். கிடைத்த பெறுபேறுகளின் அடிப்படையில் கோத்தபாயவுக்கு ஆதரவாக 55 வீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பதிவாகி உள்ளன.

இரண்டாவது இடத்தை தற்போதைய அமைச்சர் சஜித் பிரேமதாஸ பெற்றுள்ளார். அவர் பெற்ற வாக்குகள் ஆறாயிரத்துக்கும் அதிகமாகும் எனினும் சமகால பிரதமர் ரணில் விக்ரமசிங்க இந்தப் பட்டியலில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள நிலையில் அவர் 500 க்கும் சற்று அதிகமான வாக்குகளையே பெற்றுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பட்டியலில் நூற்றுக் கும் சற்று அதிகமான வாக்குகளைப் பெற்று 5ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கருத்துக் கணிப்பின் மூலம் சமகால அரசாங்கத்தின் மீது நாட்டு மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. இவ்வாறான நிலை நீடிக்குமா யின் 2020ஆம் ஆண்டுக்கு முன்னர் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்ள வேண்டிய நிலை அரசுக்கு ஏற்படும் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ)

# சிறுபான்மையினருக்கு பதவி வகிக்க இயலாதா?

அம்பாறை, ஏப்.24

இந்த நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர், ஜனாதிபதி அல்லது பிரதமராக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஏன் பதவி வகிக்க முடியாது என, அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் கேள்வி எழுப்பி உள்ளார்.

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆலையடிவேம்பு தெற்கு மற்றும் வடக்கு வங்கிகளின் புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள் பனங்காடு பொது மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"நியாயமாக எமக்குக் கிடைத்துள்ள எதிர்க்கட்சிப் பதவியையும் தலைவர் சம்மந்தனையும் மாற்ற வேண்டுமென ஏன் இந்தப் பெரும்பான்மை சமூகம் நினைக்கின்றது. அவர்களது இவ்வாறான செயற்பாடுகள் இனவாதத்தைத் தூண்டுவதுடன் தமிழ் மக்களையும் பாதித்துள்ளது. இந்த நாட்டில் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் எனக் கூறிக்கொள்ளும் நல்லாட்சி அரசாங்கம், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களை ஏமாற்றக் கூடாது. கடந்த ஆட்சியாளர்கள் செய்த அதே செயற்பாட்டை இந்த அரசாங்கமும் முன்னெடுக்க கூடாது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# மைத்திரியால் ஏமாந்த பொது எதிரணியினர்

கொழும்பு, ஏப்.24

தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற அமர்வுகள், அடுத்த மாதம் மீள ஆரம்பிக்கப்படும் போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றவுள்ள உரை மீது, வாக்கெடுப்பு எதுவும் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் கொள்கை விளக்கவுரையைத் தோற்கடித்து, ஆட்சியைக் கலைக்கலாம் என்று திட்டமிட்ட பொது எதிரணியினர் ஏமாற்றமடைந்துள்ளனர். ஜனாதிபதியின் உரை, முன்னர் கூறப்பட்டதைப் போன்று, அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரையாக அமையாது என்பதாலேயே, இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் உரை மீது வாக்களிப்பு இடம்பெறுமா, அதனால் அமைச்சரவை கலைக்கப்படுமா போன்ற சந்தேகங்கள், தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வந்தன. ஊடகங்களிலும், தொடர்ச்சியாக மாறுபட்ட கருத்துகள் வெளியாகி வந்தன.

சில கருத்துகளின் அடிப்படையில், ஜனாதிபதியால் ஆற்றப்படும் கொள்கை விளக்க உரை மீது, வாக்களிப்பு நடத்துவதற்கான வாய்ப்பு, அரசமைப்பில் வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டது.

எனினும், அடுத்த மாதம் ஜனாதிபதி ஆற்றவுள்ள உரை, அரசாங்கக் கொள்கைக் கூற்று என்ற வகைக்குள் அடங்காது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதை உறுதிப்படுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், "ஜனாதிபதியின் உரை அரசாங்கக் கொள்கைக் கூற்றாக அமைய வேண்டுமாயின், அமைச்சரவைக்கு அவ்வுரை சமர்ப்பிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். ஆனால் இந்த உரைக்கு அப்படியான நடைமுறைகள் பின்பற்றப்படாமையால் அது கொள்கை விளக்க உரையாக அமையாது" என்று விளக்கமளித்தார். (அ)

## இன்று நாளும் கோளும்

24.04.2018 செவ்வாய்க்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 11 ஆம் நாள்

நவமி பி.ப. 01.53 வரை | ஆயிலியம் பி.ப. 05.11 வரை | குளிகை மு.ப. 012.00-01.30

இராகுகாலம் 03.00- 04.30 | சுபநேரம் காலை 10.30 - 11.30 | எமகண்டம் பி.ப. 09.00 - 10.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆதாயம் | ஆதரவு | வெற்றி | பக்தி | உயர்வு | சாந்தம் | நன்மை | அமைதி | வரவு | புகழ் | பாராட்டு | கவனம் |





கிளிநொச்சி – கரைச்சிப் பிரதேச சபைக்குத் தெரிவான உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்றுக்காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், மாகாணசபை உறுப்பினர்களான த.குருகுலராஜா, ப.அரியரத்தினம் மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ஆ)

# முன்னுதாரணமான நகரமாக வவுனியாவை மாற்றுவோம்

## நகரபிதா தெரிவிப்பு



வவுனியா, ஏப்.24

வவுனியா நகரத்தை நாட்டின் முன்னுதாரணமான நகரமாக மாற்றுவதே எமது நோக்கம் என வவுனியா நகரபிதா இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வவுனியா நகரசபையால் பல வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டி உள்ளது. கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் நகர அபிவிருத்தி என்பன முக்கிய விடயமாகும். கடந்த காலங்களில் பௌர்ணமி விழாக்கள் கொண்டாடப்பட்டு பின்னர் அவை கைவிடப்பட்டிருந்தன. இந்த நிலையில், எமது காலத்தில் அதனை மீளநடத்தி வவுனியா கலைஞர்களுக்கு ஊக்கத்தை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

நகர அபிவிருத்திக்கான முடிவுகள் தன்னிச்சையாக எடுக்கப்படாது. அனைத்து உறுப்பினர்களதும் ஒத்துழைப்பு, ஆலோசனைகள் பெறப்பட்டே மேற்கொள்ளப்படும். அதற்கும் அப்பால் புலம்பெயர் மக்களதும் துறைசார் நிபுணர்களுடைய கருத்துக்களும், ஒத்துழைப்புக்களும் எமக்குத் தேவை. அதற்கு அனைவரும் கட்சி, மதம், இனம் என்ற வேறுபாடு இன்றி எமது நகரம் என்ற நோக்கோடு கைகோர்க்க வேண்டும். அதன் ஊடாகவே மக்கள் சேவையில் மகிழ்ச்சி காண முடியும்." எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஆ)

# மகிந்த ராஜபக்சவின் கருத்து உண்மைக்குப் புறம்பானது

கொழும்பு, ஏப்.24

விகாரைகள் அல்லது மத வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ள கருத்து உண்மைக்குப் புறம்பானது என புத்தசாசன அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.



விகாரைகள் அல்லது ஏனைய மத வழிபாட்டுத் தலங்களைப் புதிதாக நிர்மாணிப்பதைத் தடுக்க அரசாங்கம் சட்டம் ஒன்றைக்கொண்டு வரத் தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருமாயின் விகாரைகள், அறநெறிப் பாடசாலைகள் உட்பட எந்த மதத் தலங்களையும் புதிதாக நிர்மாணிக்க முடியாது போகும் என முன்னாள் ஜனாதிபதி கூறியிருந்தார். எனினும் அரசாங்கம் அப்படியான சட்டத்தை கொண்டு வருவது தொடர்பான எந்தத் தீர்மானத்தையும் எடுக்கவில்லை.

குறைந்த வசதிகளைக் கொண்ட விகாரைகள் மற்றும் ஏனைய மத வழிபாட்டுத் தலங்களை அடையாளம் கண்டு அவற்றை முன்னேற்றுவதற்கான முக்கியத்துவத்தை வழங்கும் நோக்கிலேயே உத்தேசம் ஒன்று புதிய சட்டம் மூலம் கொண்டு வரப்பட உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# வடக்கு – கிழக்கில் அலங்கார மீன் உற்பத்தி



கொழும்பு, ஏப்.24

நாட்டில் அலங்கார மீன் ஏற்றுமதி மற்றும் உள்ளூர் வர்த்தகத்துக்கான வேலைத் திட்டம் என்பன மேற்கொள்ளப்பட உள்ளன. இதன் ஒரு கட்டமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் அலங்கார மீன் உற்பத்தி மேற்கொள்ளப்பட உள்ளது என்று அலங்காரமீன் தொழில்த்துறையில் ஈடுபட்டுள்ள சங்கத்தின் தலைவர் ரவிந்திர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"ஏற்றுமதித் துறையில் கூடுதலான வருமானத்தைப் பெறக்கூடிய அலங்கார மீன் உற்பத்தியை சர்வதேச தரத்தில் மேம்படுத்துவதற்கு, தேவையான தொழில்நுட்பம், நிதி வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும். இதன் ஊடாகத் தேசிய வர்த்தகம் மேம்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்பொழுது இந்தத் திட்டத்தின் கீழ் ஏழு மாகாணங்களில் உள்ள சுமார் 250 பேர் ஈடுபட்டுள்ளனர். இந்தத் தொகையை 500 ஆக அதிகரிக்கும் நோக்கிலேயேவடக்கு, கிழக்குமாகாணங்களிலும் அலங்கார மீன் உற்பத்தி மேற்கொள்ளப்பட உள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# கடும் வெப்பம் காரணமாக சிறுவர்களுக்குப் பாதிப்பு

கொழும்பு, ஏப். 24

நாட்டில் நிலவி வரும் கடும் வெப்ப நிலை காரணமாக சிறுவர்கள் நோய் வாய்ப்படும் நிலை ஏற்படும் என வைத்திய அதிகாரி வைத்தியர் லால் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

பகல் பொழுதுகளில் வெளியில் நடமாடித் திரிவதைக் கூடுமானவரை தவிர்த்துக் கொள்ளுமாறும், வெப்பத்தால் ஏற்படும் இவ்வாறான அசாதாரண நிலைமையில் இருந்து பாதுகாத்துக்கொள்வதற்குப் பகல் பொழுதுகளில் அதிகம் நீர் அருந்துமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்பொழுது நிலவும் வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாக திறந்த வெளியில் மேற்கொள்ளப்படும் பணிகளை கூடியவரையில் தவிர்த்துக்கொள்ளுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

வவுனியாவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த 16 இராணுவ வீரர்கள் மயக்கமுற்று நேற்றுமுன்தினம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இதற்கு அதிக வெப்பமே காரணமாக இருக்கும் என்றும் வைத்திய அதிகாரி சுட்டிக்காட்டி உள்ளார். (ஆ)

# 8 மாதக் குழந்தையுடன் ரயிலில் பாய்ந்த தந்தை


குருநாகல், ஏப். 24

குருநாகல் - பல்லேகொட்டுவ பகுதியில் தந்தை ஒருவர் தனது 8 மாதக் குழந்தையுடன் ரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இந்தச்சம்பவம் நேற்றுமுன்தினம்மாலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறையில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலின் முன் பாய்ந்தே இவர் தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

பல்லேகொட்டுவ - வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பிரஸ்தாப நபர், 2 ஆவது மனைவியுடன் வாழ்ந்து வருவதாகவும், குடும்பத்தகராறு காரணமாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.



இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்

# 6 பேர் பயணிக்கும் ஓட்டோ அறிமுகம்

கொழும்பு, ஏப். 24

இலங்கையில் 6 பேர் பயணிக்கக் கூடிய ஓட்டோ விரைவில் அறிமுகம் செய்யப்பட உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பயன்பாட்டில் உள்ள ஓட்டோவில் சாரதி உட்பட 4 பேர் மாத்திரமே பயணிக்கக் கூடிய சூழல் உள்ளது. ஆனால், தற்போது வரவிருக்கும் ஓட்டோவில் சாரதி உட்பட 6 பேர் பயணிக்க முடியும்.

இலங்கை சட்டத்துக்கு அமைய 3 பயணிகள் மாத்திரமே ஒரு ஓட்டோவில் பயணிக்க முடியும். எனினும், இந்தப் புதிய தயாரிப்பு மூலம் அதிக வசதிகள் மற்றும் இலகுவாக பயணம் மேற்கொள்ள முடியும் எனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறான ஓட்டோக்கள் ஆசிய நாடுகள் சிலவற்றில் மாத்திரமே பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# 500 ஹெக்டேயரில் இறப்பர் செய்கை

நாட்டில் உள்ள நான்கு மாவட்டங்களில் 500 ஹெக்டேயர் நிலப்பரப்பில் புதிதாக இறப்பர் செய்கை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது என இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் அறிவித்துள்ளது.

கேகாலை, கண்டி, கம்பஹா, குருநாகல் ஆகிய மாவட்டங்களே இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன என திணைக்களத்தின் கேகாலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எம்.எஸ்.சீ.சுசந்த பெரேரா



# கலைகளைப் பாதுகாப்போம்

வேலணை, ஏப்.24


கொடிய யுத்தம் எமது பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த காலத்திலும் எமது இனத்தின் கலை கலாசாரங்களை அழிவுறாது பேணிப் பாதுகாத்தோம். அந்த வகையில் இப்போதுள்ள அமைதிச் சூழலில் எமது இனத்தின் வரலாற்று அடையாளங்களையும், கலைகளையும் பாதுகாப்போம் என வேலணை பிரதேச சபை தவிசாளரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச நிர்வாக செயலாளருமான நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"எமது இனத்துக்கென ஒரு தனித்துவம் உண்டு. எமது இனத்தின் கலை, கலாசாரங்கள் உலகுக்கே உதாரணங்களாகத் திகழ்கின்றன.

அந்தவகையில் அவற்றைப் வளர்ப்பதற்கு நாம் பேதங்களை மறந்து ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னார் அல்லிராணிக் கோட்டையை புனரமைக்க நடவடிக்கை எடுக்குக



மன்னார், ஏப். 24

அழிவடைந்துவரும் தொல்லியல் சின்னமாகிய மன்னார் அல்லிராணிக் கோட்டையைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் அரிப்புக் கிராமத்தில் உள்ள அல்லிராணிக் கோட்டை தமிழர்களது பண்பாட்டு வரலாற்றிலும், புராதான வணிக பண்பாட்டு வரலாற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்த மையமாக உள்ளது.

முழுவதும் செங்கற்களினால் அமைக்கப்பட்டுள்ள இந்த அல்லிராணிக் கோட்டை சதுர வடிவான கட்டமைப்பாக அமையப்பெற்றுள்ளது.

தொல்லியல் ரீதியாக அல்லிராணிக் கோட்டையின் அமைவிடம் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கும் இந்தக் கோட்டை ஆங்கிலேயர் காலத்தில் புனரமைக்கப்பட்டது.

இந்த கோட்டைக்கு அண்மையில் காணப்படுகின்ற வெளிச்சவீடு அரிப்பு கிராமத்தின் வரலாற்று பொருளாதாரத்தின் தன்மைக்கு சான்றுபகர்வதுடன், இந்த முகத்துவார பகுதி பிரதான துறைமுகமாக இருந்திருக்கலாம் என வரலாற்றாய்வாய்ளர்கள் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதை மாத்திரைகளுடன் மாணவன் கைது

ஏறாவூர், ஏப்.24

செங்கலடிப் பகுதியில் வலி நிவாரணி மாத்திரை என்ற போர்வையில் பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்வதற்கென ஓட்டோவில் எடுத்துச்செல்லப்பட்ட 800 போதை மாத்திரைகளை ஏறாவூர்ப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, குறித்த ஓட்டோவில் சென்ற பாடசாலை மாணவன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சாரதியும், மற்றுமொரு நபரும் தப்பியோடி உள்ளனர் .

இந்த மாத்திரைகள் ஒவ்வொன்றும் 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள 18 வயதுடைய மாணவன், ஓட்டமாவடியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் விஞ்ஞானப் பிரிவில் கற்பதாகக் தெரியவருகிறது. (ஆ)

# சைட்டத்துக்கு எதிராக நீதிமன்றம் செல்லத் தீர்மானம்

கொழும்பு, ஏப்.24

சைட்டம் மருத்துவபீட மாணவர்களுக்கு கொத்தலாவல பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் மருத்துவ பட்டத்துக்கு சைட்டம் என பெயர்க் குறிப்பிடப்படுவதற்கு எதிராக, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக சைட்டம் மருத்துவ பீட பெற்றோர் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருவதாகவும், இந்த வார இறுதிக்குள் நீதிமன்றில் அதனை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் குறித்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளது. (ஆ)

# மண்மேடு சரிவு: இருவர் காயம்

கண்டி, ஏப்.24

கண்டி - சங்கமித்தா மாவத்தைப் பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில், இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இவர்கள் இருவரும் வீட்டு நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் போதே, இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

காயமடைந்த இருவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஆ)

# வடகொரியாவில் விபத்து: 30 சீனர்கள் உயிரிழப்பு




பியாங்யாங், ஏப்.24

வடகொரியாவில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், சீனாவைச் சேர்ந்த 30 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயம் அடைந்துள்ளனர் என ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விபத்தில் ஏராளமானோர் பலியாகியிருக்கலாம் என சர்வதேச ஊடகங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

சுற்றுலாப் பயணிகளைச் ஏற்றிச் சென்ற குறித்த பஸ், வாங்ஹே மாகாணத்தில் வைத்தே விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்படுள்ளனர்.

வடகொரியாவில் சுற்றுலா மூலம் ஆண்டுக்கு 4.4 கோடி அமெரிக்க டொலர் வருமானமாகக் கிடைக்கிறது. இங்கு சுற்றுலா மேற்கொள்ளும் வெளிநாட்டவர்களில் 80 சதவீதத்தினர் சீனாவை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



# இனிமேல் கடவுள் காப்பாற்றட்டும், தமிழனை?

வாயிக்கை பாட்டொண்டை முணுமுணுத்துக் கொண்டு காலங் காத்தாலை முதலி வந்தவர். அப்பிடி என்ன விஷேசம். பொட்டுப் பிறையோடை, கையிலை அருச்சனையும் கொண்டு என்ன விசேஷம் – எண்டு கேட்டன். சிரிச்சார். முகத்திலை ஒரு வெக்கம். அண்ணை, உனக்குச் சொன்னால் என்ன? இண்டைக்கு மனுசியின்ரை பிறந்த நாள். மச்சான் சுவிஸிலை இருந்து போன் எடுத்து ஒரே கரைச்சல். "அத்தான் எனக்கு இருக்கிறது அவள் ஒருத்திதான் சகோதரி. ஆனபடியால் அவளின்ரை சந்தோஷம்தான் எனக்குப் பெரிசு. அதாலை அவளின்ரை பிறந்த நாளை வடிவாக் கொண்டாடுங்கோ எண்டு ஐம்பது ஷரூபா காசும்' அனுப்பியிருக்கிறான். – எண்டார் முதலி. "ஐம்பது ரூபா என்னத்தைக் காணுமெடா முதலி? – எண்டன். அங்காலையும், இஞ்சாலையும் பாத்திட்டுக் காதுக்கை கிட்ட வந்து "ஐம்பதாயிரம்" எண்டார். அப்ப அதை வைச்சு என்ன செய்யப் போறாய் எண்டு கேட்டன். எல்லாம் முடிஞ்சு ஒரு ஐயாயிரம் மிச்சம் கிடக்கு. ஒண்டுமில்லை ஒரு கேக்கு வாங்கினன். அதோடை எங்கடை குடும்பத்திலை உள்ள ஆக்களை மதியம் சாப்பாட்டுக்குக் கூப்பிட்டிருக்கிறன். அதுக்கு ஒரு சின்னக் கிடாய் அவிட்டன். அதோடை சரி. நீயும் வந்திடவேணும், என்ன?" எண்டிட்டுப் போறார் பாருங்கோவன்.

அது தான் யோசிச்சன். காலமை எழும்பின உடனை தன்ரை மனுசியின்ரை பிறந்த நாள் அண்டு கோயிலுக்குப் போய் அவள் கனகாலம் காய்சல், பீச்சலில்லாமல் சீவிக்க வேணும் எண்டு வேண்டின முதலிக்குப் பின்னேரம் ஒரு ஆட்டை வாங்கி வெட்ட வேணும் எண்ட எண்ணம் எப்பிடி வந்தது எண்டுதான் என்ரை யோசினை. உந்தப் பழக்க, வழக்கம் ஆராலை வந்து எங்கடை சமூகத்துக்கை உள்ளிட்டது எண்டது தான் என்ரை கேள்வி?

இப்ப, தம்பி ஆறுதிருமுருகன் தன்ரை பிரசங்கத்திலை சொன்னதுதான் ஞாபகத்துக்கு வந்திது. நாங்கள் சைவர்கள். ஆனால் இப்ப இந்துக்கள் எண்ணுறம். எங்கடை வழமை ஒரு விளக்கைக் கொளுத்தி விழாவைக் கொண்டாடிறதுதான். ஆனால் இப்ப பாத்தால் ஒரு புதுப்பழக்கத்தைக் கொண்டு வந்திட்டம். ஒரு கேக்கை வாங்கிறது. அதிலை மெழுகுதிரியைக் கொளுத்திறது. பிறகு அதை வாயாலை ஊதி நூத்துப் போட்டு விழாவைக் கொண்டாடுறது. பிறகு கேக்கை வெட்டித் தீத்தி சந்தோஷப்படுகிறது. அவர் அப்பிடிச் சொன்னதைக் கேக்க எங்கடை சமூகத்திலை எவ்வளவு எரிச்சலாக் கிடக்குத் தெரியுமே?

சண்டை வந்திது. தாங்கள் பாதிக்கப்பட்டிட்டம் எண்டு பொய் சொல்லிக் கொண்டு கொஞ்சம் வெளிநாடுபோய் அங்கை உள்ள கிலிச கெட்ட பழக்கத்தை எல்லாம் பழகிக் கொண்டு, "கொலிடேக்கு வாறம். இனசனத்தோடை சந்தோஷமா இருந்திட்டுப் போகப்போறம்" எண்டு சொல்லிக் கொண்டு வந்து இஞ்சை உள்ள ஆக்களுக்குத் தாங்கள் அங்கை பழகின கிலிசகெட்ட பழக்கத்தை எல்லாம் பழக்கி, விட்டிட்டுப் போகினம். இஞ்சை உள்ள அரைவாசிப் பொம்பிளைப் பிள்ளையள் அரைகுறை உடுப்புகள் போடப் பழகினது உவையளாலைதான். தெரியுமோ?

கொஞ்ச நாளைக்கு முன்னம் எங்கடை பக்கத்திலை ஒரு பொம்பிளைப் பிள்ளைக்குப் பிறந்த நாள். வரச் சொல்லி கூப்பிட்டினம். போனனான். முதலிலை பாட்டைப் பாடிச்சினம். கையைத் தட்டிச்சினம். கேக்கை வெட்டிச்சினம். அந்தப் பெடிச்சியின்ரை தாய் தேப்பன் போய்க் கொஞ்சினதோடை "கொஞ்சல் படலம்" துவங்கிச்சிது. பிறகு சொந்தக்காரர். பிறகு அதின்ரை சிநேகிதியள் எண்டு தொடங்கி அதின்ரை வகுப்புப் பெட்டையள் போய் கொஞ்ச பாத்துக் கொண்டிருந்த வகுப்புப் பெடியள் விடுவங்களே? தொடந்து அங்கை....ச்..ச. சத்தந்தான். பிறகு கேக்கிலை கிடந்த கிறீமை எடுத்து அந்தப் பெட்டையின்ரை முகத்திலை அப்பி... கேடுகெட்ட பிறந்த நாள் கொண்டாட்டமாப் போச்சுது. விட்டால் போதுமெண்டு எழும்பி வந்திட்டன்.

அதை முதலிக்குச் சொன்னால். கள்ளப் பயல் அவர் சொல்லுறார், "அண்ணை ஊரோடை ஒத்து வாழவேணும். நீ எழும்பி வந்தது பிழை. நீயும் கிட்டப் போய் ஒருக்காக் கொஞ்சிப் போட்டுக் கொண்டு போன என்வலப்பையும் பெடிச்சீட்டைக் குடுத்திட்டு வந்திருக்க வேணும். நீ அண்ணை நாகரீகம் இல்லாமல் நடந்திருக்கிறாய். நாளைக்கு உன்ரை பேரன் பேத்தியும் வந்து உதைத்தானே செய்யப்போகினம். அப்ப என்ன சொல்லப் போறாய்? – எண்டு எனக்கு வகுப்பெடுக்கிறார் முதலி.

அப்பதான் நினைச்சன் ஒரு முதலி இல்லை இப்ப கன முதலியள் உப்பிடிப்பட்ட கேடு கெட்ட காலாச்சாரத்துக்கை முழ்கிப்போய் நிக்கினம் எண்டு. உது நல்லதுக்கில்லை. எங்கடை இனத்துக்குப் பிடிச்ச கேடு எண்டு தான் நான் நினைக்கிறன்.

செல்வநாயகத்தார் சொன்ன மாதிரி தமிழ் இனத்தை இனிமேல் கடவுள்தான் காப்பாற்ற வேணும். ஐ..யோ! எண்டு கத்த வேணும் போலை கிடக்கு.

- வில்லங்கம் விநாசி

# மகிந்தவோடு இணையேன்!

## துமிந்த திட்டவட்டம்

கொழும்பு, ஏப்.24

“ராஜபக்ச அரசாங்கத்தில் நடைபெற்ற தவறான செயல்கள் காரணமாகவே நான் அன்றைய அரசாங்கத்தில் இருந்து வெளியேறினேன். இதனால் ராஜபக்சவினருடன் இணைந்து மீண்டும் அரசாங்கம் ஒன்றில் பணியாற்ற நான் தயாரில்லை” என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

“ராஜபக்ச அரசாங்கத்தில் இருந்து விலகியதை மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர் என்பதால், மக்களுக்கு நான் துரோகியாக முடியாது. ஏதோ ஒரு காரணத்தினால், இரண்டு தரப்பும் மீண்டும் இணைந்து கொண்டால், அன்று போல், இம்முறையும் நெஞ்சை நிமிர்த்தி, நேரடியான தீர்மானத்தை எடுப்பேன். ராஜபக்சவினருக்கும் எனக்கும் தனிப்பட்ட ரீதியில் எந்த விரோதமும் இல்லை. அவர்களுடன் கொள்கை ரீதியான பிரச்சினை மட்டுமே உண்டு” எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

### சிங்களக் குடியேற்றம் பற்றி

# கூட்டமைப்பு எம்.பிக்களுடன் மாகாண சபையினர் சந்திப்பு

முல்லைத்தீவு, ஏப்.24

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் வடக்கு மாகாண சபையினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் 26 ஆம் திகதி வியாழக்கிழமை வடக்குமாகாண சபையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

முல்லையில் இடம்பெறும் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பாக மாகாண சபை அமர்வில் சுட்டிக் காட்டப்பட்டதையடுத்து முல்லைத் தீவுக்கு நேரடியாக வடக்கு மாகாண சபையினர் செல்வதென்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் தலைமையிலான மாகாண சபையினர் அண்மையில் முல்லைத்தீவுக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களையும் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாகவே நாளை மறுதினம் சபை அமர்வுகள் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (அ)

# சஜித்தையும், நவீனையும் துடுப்பெடுத்தாட விடுங்கள்

## ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை

கொழும்பு, ஏப்.24

“ஐக்கிய தேசியக் கட்சியை முன்னின்று வழிநடத்துவதற்கான வாய்ப்பை சஜித் பிரேமதாஸ மற்றும் நவீன் திசாநாயக்க ஆகியோருக்கு வழங்க வேண்டும். சஜித்துக்கும் நவீனுக்கும் துடுப்பெடுத்தாடுவதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்க பல தடவைகள் துடுப்பெடுத்தாடிவிட்டார்” என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

“2002ஆம் ஆண்டு ரணில் துடுப்பெடுத்தாடி சதமடித்தார், 2004 ஆம் ஆண்டு ஆட்டமிழந்தார், 2010 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில், சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன போன்ற வீரர்களை ஐக்கிய தேசியக் கட்சி, இறக்குமதி செய்தது. தற்போது ஏனையவர்களுக்கு துடுப்பெடுத்தாடும் வாய்ப்பினை வழங்குவதற்கான காலம் கனிந்துள்ளது” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# தொடர்ச்சிகள்

### புத்தர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனையடுத்து யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது.,

வவுனியா வளாகத்தின் பம்பைமடுவில் அமைந்துள்ள வியாபாரக் கற்கைகள் பீடத்தில் கல்வி பயிலும் சிங்கள மாணவர்கள் அங்கு புத்தர் சிலை ஒன்றினை வைக்கும் முயற்சில் நேற்று ஈடுபட்டனர். பல்கலைக் கழகத்தில் அனுமதி பெறாது மாணவர்கள் மேற்கொண்ட இந்த முயற்சியை பல்கலைக்கழக நிர்வாகம் தடுத்து நிறுத்தியுள்ளது.

இதன்போது சிங்கள மாணவர்களால் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டது. இதனையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டதுடன் சிங்கள மாணவர்கள், பார்க் வீதியில் அமைந்துள்ள வளாகத்தின் அலுவலகத்தினை முற்றுகையிட்டனர்.

இதனால் அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டதுடன் வவுனியா வளாகமும் காலவரையரையின்றி மூடப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களும் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

### இரணைத்தீவில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“எங்களின் போராட்டத்தை நல்லாட்சி அரசும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் கண்டுகொள்ளாமல் கைவிட்டு விட்டனர் எனவே தான் நாங்கள் எங்கள் சொந்த நிலத்துக்கு சென்று அங்கு தங்கியிருந்து போராட்டத்தை மேற்கொள்ள தீர்மானித்தோம். நாங்கள் எங்களது பூர்வீக நிலத்திலிருந்து வெளியேறப் போவதில்லை. கடற்றொழில் நடவடிக்கைகளையும் இரணைதீவிலிருந்தே மேற்கொள்ளவும் இருக்கின்றோம்” எனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

1992 ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கை காரணமாக இரணைதீவில் இருந்து வெளியேறிய மக்கள் இர்ணை மாதாநகர் கிராமத்தில் வசித்து வருகின்றனர். இவர்கள் தங்களின் பூர்வீக நிலத்தை விட்டு வெளியேறிய நிலையில் வாழ்வாதாரத்தை இழந்து பெரும் நெருக்கடிக்குள் வாழ்ந்து வந்த நிலையிலேயே கடந்த வருடம் மே மாதம் முதலாம் சொந்த நிலத்துக்குச் செல்வதற்கான போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)

### எதிர்க்கட்சித்.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வசமுள்ள எதிர்க்கட்சித் தலைவர் பதவி பறிபோகும்” என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இரா.சம்பந்தனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவந்து, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கூட்டமைப்பிடம் இருந்து பறிப்பதற்கு ஒன்றிணைந்த எதிரணி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் கருத்து வெளியிடுகையில்,

“ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாகத் தெரிவானவர்களே. தேசிய அரசாங்கத்தின் ஒரு பங்காளிக் கட்சி, எதிர்க்கட்சியாக ஒருபோதும் செயற்பட முடியாது. அடுத்த நாடாளுமன்ற அமர்வில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து முழுமையாக வெளியேறி எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தால் மாத்திரமே எதிர்க்கட்சித் தலைவர் பதவி அவர்களுக்குக் கிடைக்கும்” என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

### சீன.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சீனத் தூதுவர் செங் சியுஹானுக்கும், பிரதமருக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

“ சில வெளிநாட்டு ஊடகங்கள் அம்பாந்தோட்டையில் சீன இராணுவத்தளமொன்று அமைக்கப்படப்போகின்றதா? என்ற தொனியில் கேள்வி எழுப்பியிருந்ததாக, சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகம், கொழும்புத் துறைமுக நகரம் உள்ளிட்ட முக்கிய அபிவிருத்தித் திட்டங்களில் இலங்கை சீனாவுடன் இணைந்து பணியாற்றி வருகின்றோம். எதிர்காலத்தில் மேலும் பல புதிய முதலீடுகளை ஈர்த்து இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை ஏற்படுத்த எதிர்ப்பார்த்துள்ளோம்” எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

### மாண்ட பெண்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பெண்ணைக் காணவில்லை எனக் கடந்த மார்ச் 24ஆம் திகதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், கடந்த 10 ஆம் திகதி களுகங்கையில் இருந்து அடையாளம் தெரியாத சடலமொன்றைப் பொலிஸார் மீட்டு வைத்தியசாலையின் பிணவறையில் வைத்திருந்தனர். அந்தச் சடலம் தனது மகளுடையது என காணாமல் போன பெண்ணின் தந்தையார் அடையாளம் காட்டியுள்ளார். அதனைத் தொடர்ந்து குறித்த சடலம் குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு சடலம் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், காணாமல் போனதாகக் கூறப்பட்ட பெண் 25 நாட்களின் பின் வீடு திரும்பியுள்ளார்.28 வயதுடைய குறித்த பெண் அவரது குழந்தையுடன் காணாமல் போயிருந்த நிலையில், திரும்பி வரும் போதும் குழந்தையுடனேயே வந்துள்ளார்.

சமூக வலைத்தளம் ஊடாக நபரொருவருடன் தகாத உறவை ஏற்பட்டதால், வீட்டை விட்டு வெளியேறி நுவரெலியா பிரதேசத்தில் அமைந்துள்ள விடுதியொன்றில் குறித்த இளைஞருடன் தங்கியிருந்ததாகக் குறித்த பெண் பொலிஸில் வாக்குமூலம் அளித்துள்ளார். (அ)

### மின்னல் வேகம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டப்பிராயைச் சேர்ந்த 23 வயதுடைய விஜயரத்தினம் பிரசாத் என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

மன்னார் வீதியூடாக யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் அதிவேகமாகப் பயணித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியது.இதன்போதே குறித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே பலியானார். படுகாயமடைந்த மற்றைய இளைஞர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ)

### போன மைத்திரி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநலவாய உச்சி மாநாடு கடந்தவாரம் லண்டனில் நடைபெற்றது. இதில் பங்கேற்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன உள்ளிட்ட குழுவினர் லண்டன் சென்றிருந்தனர்.

இந்தப் பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பிரிட்டன் பிரதமர் தெரெசா மே உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து இருதரப்பு பேச்சுக்களை நடத்துவதற்கு மைத்திரி எதிர்பார்த்திருந்தார்.

எனினும், இந்தப் பயணத்தின் போது, எந்தவொரு வெளிநாட்டுத் தலைவரையும் தனியாகச் சந்தித்து இருதரப்பு பேச்சுக்களை நடத்தும் வாய்ப்பு மைத்திரிபாலவுக்குக் கிடைக்கவில்லை. இதனால் வெறுங்கையுடன் ஜனாதிபதி நாடு திரும்பியதாகக் கூறப்படுகின்றது. (அ)

### பளையில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரியப்படுத்தியுள்ளார். இதனையடுத்து, குறித்த இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் நிலக் கீழ் பதுங்கு குழி விடுதலைப்புலிகளினுடையது எனத் தெரிவித்ததோடு அதனைப் பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். குறித்த பதுங்கு குழியானது சுமார் 35 அல்லது 45 அடி ஆழமானதாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

### இலங்கைக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியல் திணைக்களம் எச்சரித்திருந்தது.

இந்த நிலையில் இலங்கையிலும், தமிழ்நாட்டின் தென்பகுதியிலும் பல இடங்களில் கடல் நீர்மட்டம் அதிகரித்து, தரைப்பகுதிக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளது. உயரமாக எழுந்த பேரலைகளால் கரையோரப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதற்கான காரணம் குறித்து கருத்து வெளியிட்ட வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரி ஒருவர்,

“செவ்வாய்க்கிழமை வரை இந்தக் காலநிலை நீடிக்கும். இலங்கைக்கு அருகே தாழமுக்கம் ஒன்று உருவாகியுள்ளதாலேயே கடற் கொந்தளிப்பு ஏற்பட்டு, உயரமான அலைகள் தோன்றுகின்றன. இதனால் சுனாமி ஆபத்து ஏற்படாது. கடல் அலைகள் இரண்டரை தொடக்கம் மூன்று மீற்றர் உயரத்துக்கு மேலெழும்பும்” என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே கற்பிட்டியில் முதுபந்திய தீவுக்குள் கடல்நீர் உட்புகுந்துள்ளதால் தீவின் ஒரு பகுதி, பிரதான பகுதியில் இருந்து துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

### வாள் வெட்டுக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுள்ளது. இதன்போது வீட்டு யன்னல்கள், மோட்டார் சைக்கிள் ஆகியன கொத்திச் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

“இரவு 11 மணியளவில் தெருவில் சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது 6 பேர் அளவில் வாள்களுடன் வந்தார்கள். நான் பயத்தில் வீட்டுக்குள் ஓடிச் சென்று கதவை மூடிக்கொண்டேன். உள்ளே இருந்தவாறு சத்தமிட்டோம். அயலவர்கள் ஓடி வந்ததால், வெளியில் இருந்த மோட்டார் சைக்கிள், வீட்டு யன்னல் ஆகியவற்றைச் சேதப்படுத்திவிட்டு தப்பிவிட்டார்கள்” என இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கிராமசேவையாளர் தெரிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்புறமாக தனித்து வாழும் இளம் பெண் ஒருவரின் வீட்டின் மீது அதிகாலை 5 மணியளவில் பெற்றோல் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அங்கும் மோட்டார் சைக்கிள் மற்றும் பொருட்கள் என்பன சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்று அதிகாலை 5.30 மணியளவில் மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள பிறிதொரு வீட்டின் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ-4)


### ஜே.வி.பியும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையின் பிரதிபலனாகவே ஜே.வி.பி இரண்டாகப் பிரிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகசந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அநுரகுமார திசாநாயக்கவின் அணி பிரதமர் மற்றும் அரசாங்கத்தை பாதுகாக்கும் நிலைப்பாட்டில் இருப்பதாகவும், ஆனால் லால் காந்தவின் அணியோ அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் முயற்சியில் இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ)

# படகு கவிழ்ந்து விபத்து: சீனாவில் 17 பேர் சாவு!



பீஜிங், ஏப்.24

சீனாவின் குய்லின் பகுதியில் அமைந்துள்ள தாவோ ஹூவாஜியாங் ஆற்றில் இரண்டு படகுகள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 17 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தாவோஹூ வாஜியாங் ஆற்றில் படகுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். இதற்குப் பொலிஸாரிடம் அனுமதி பெற வேண்டும். இந்த நிலையில், இந்த ஆற்றில் நேற்றுமுன்தினம் படகுப் போட்டி நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால், இதற்குப் பொலிஸாரிடம் அனுமதி பெறவில்லை.

படகுப் போட்டிக்குத் தயாராகிக் கொண்டிருந்த போது பயிற்சி ஓட்டம் நடைபெற்றுள்ளது. அப்போது திடீரென ஏற்பட்ட விபத்தில் இரண்டு படகுகள் ஆற்றில் மூழ்கின. இதில், இரண்டு படகுகளிலும் பயணம் செய்த அனைவரும் ஆற்றில் மூழ்கினர். உடனடியாக மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், 17 பேர் உயிரிழந்தனர். இதில் சுமார் 40 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதை அடுத்து, இந்த படகுப் போட்டிக்கு ஏற்பாடு செய்த இருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஆ)

# சர்ச்சைப் பேச்சு வேண்டாம்

## பா.ஜ.கவுக்கு மோடி கண்டிப்பு



புதுடில்லி, ஏப். 24

சர்ச்சைக்குரிய வகையில் பேச வேண்டாம். அரை வேக்காட்டுக் கருத்துகளை வெளியிட வேண்டாம். இவ்வாறான செயற்பாடு பா.ஜ.கவின் நற்பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தலித் பிரச்சினை, பாலியல் பலாத்காரம் உட்பட பல்வேறு விவகாரங்களை முன்வைத்து, பா.ஜ.க. தலைவர்களின் சர்ச்சைக்குரிய பேச்சுகளைக் குற்றம் சாட்டியும், மத்திய பா.ஜ.க. அரசுக்கு எதிராகவும் எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தத் தொடங்கியுள்ளனர். இதை அடுத்தே பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

"நாம் தவறு செய்து வருகிறோம். ஊடகங்களுக்கு மசாலா (சர்ச்சைக்குரிய செய்தி) அளித்து வருகிறோம். பிரச்சினைகளை அலசி ஆராய்வதில் நிபுணர்களாகவும், சிறந்த சமூக விஞ்ஞானிகளாகவும் நீங்கள் இருக்கலாம். ஆனால், கமராவைப் பார்த்ததும் நீங்கள் பேசத் தொடங்கி விடுகிறீர்கள்.

பொறுப்பற்ற வகையில் நீங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள், கட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. எனவே, கட்சியில் இருக்கும் அனைவரும் பிரச்சினைகள் குறித்துக் கருத்து தெரிவிப்பதை கைவிட வேண்டும்.

காங்கிரஸ் கட்சி செய்த தவறுகளால் மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வரவில்லை. மக்களுடன் தொடர்ந்தும்வைத்திருந்த தொடர்புகளால்தான் பா.ஜ.கவால் ஆட்சிக்கு வர முடிந்தது. எனவே, ஆட்சியில் இருக்கும் வேளையில் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய நீங்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை என மத்திய அரசு மீது குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. கிராம மக்களின் வாழ்வாதாரம், வாழ்க்கை முறை ஆகியவற்றில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சுய தொழில் செய்வதை ஊக்குவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

வேலைவாய்ப்பை முன்வைத்து அரசியல் செய்வோர், அதைத் தொடர்ந்து செய்து வருவார்கள். அதேநேரத்தில், இளைஞர்களின் திறனை அதிகரிப்பதன் வாயிலாக, மக்களுக்கு சுயதொழில் வேலை வாய்ப்புகளை மத்திய அரசு வழங்கும். கிராமங்களில் சமூக நல்லிணக்கத்தை கட்சியினர் பரப்ப வேண்டும். ஏழைகள், தலித்துகள், பழங்குடியினர் ஆகியோரின் முன்னேற்றத்துக்குக் கட்சியினர் பாடுபட வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# அணு ஆயுத எரிபொருள் தயாரிப்போம்

அமெரிக்காவுக்கு ஈரான் எச்சரிக்கை



நியூயோர்க், ஏப்.24

அணு சக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா விலகினால், அணு ஆயுதங்களில் எரிபொருளாகப் பயன்படுத்துவதற்கேற்ற வகையில் யுரேனியத்தைச்செறிவூட்டும்பணியை மீண்டும் தொடங்குவோம் என்று ஈரான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அமெரிக்கா சென்றுள்ள ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் முகமது ஜாவத் ஸரீஃப், நியூயோர்க் நகரில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"அணுசக்தி தொடர்பாக ஈரானுக்கும், வல்லரசு நாடுகளுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் இருந்து விலகப் போவதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறி வருகிறார். அவ்வாறு அவர் அணு சக்தி ஒப்பந்தத்தில் இருந்து விலகினால், அதற்கான எதிர் நடவடிக்கைகள் குறித்து தற்போதே ஆலோசித்து வருகிறோம்.

அந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் அத்தகைய எதிர் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

அதற்காக, ஈரான் அணு ஆயுதத்தை உருவாக்கிவிடும் என்று அமெரிக்கா அச்சப்படத் தேவையில்லை. இருந்தாலும், அணு ஆயுதத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் யுரேனியத்தை செறிவூட்டும் பணியில் ஈரான் தீவிரமாக ஈடுபடும்." என்று அவர் தெரிவித்தார்.

அணுசக்தித் திட்டங்கள் அணு ஆயுதம் தயாரிப்பதற்கானவை இல்லை என்பதை உறுதி செய்ய ஈரானும், அதற்குப் பதிலாக அந்த நாட்டின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வல்லரசு நாடுகளும் ஒப்புக் கொண்டு, இரு தரப்பினருக்கும் இடையே ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் ஒப்பந்தம் கையெழுத்தானது.

ஒபாமா ஜனாதிபதியாக இருந்த போது மேற்கொள்ளப்பட்ட கடுமையான முயற்சியின் பலனாக உருவான இந்த ஒப்பந்தம், அமெரிக்கா மேற்கொண்டதிலேயே மிகவும் மோசமான ஒப்பந்தம் என்று தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விமர்சித்து வருகிறார்.

மேலும், தான் ஆட்சிக்கு வந்தால் ஈரானுடனான அணுசக்தித் திட்டத்தைக் கைவிடப்போவதாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின்போது ட்ரம்ப் வாக்குறுதி அளித்திருந்தார்.

அதன்படி, ஈரான் அணுசக்தி ஒப்பத்தில் உள்ள குறைபாடுகள் களையப்பட வேண்டும் அல்லது ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா விலகிவிடும் என்று அண்மையில் டொனால்ட் ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தால். இந்தச் சூழலில், அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# 26 வயது பெண்ணை மணந்த 52 வயது கார்த்தி பட வில்லன்



மும்பை, ஏப்.24

நடிகர் கார்த்தி நடித்துள்ள அலெக்ஸ் பாண்டியன், பையா ஆகிய படங்களில் வில்லனாக நடித்தவர் மிலிந்த் சோமன். சரத்குமாரின் பச்சைக்கிளி முத்துச்சரம், பார்த்தீபனின் வித்தகன் ஆகிய படங்களிலும் இவர் நடித்துள்ளார். ஹிந்திப் பட உலகிலும் இவர் முன்னணி வில்லன் நடிகராக இருக்கிறார். இவருக்கு 52 வயது ஆகிறது.

மிலிந்த் சோமன் ஏற்கனவே திருமணம் ஆகி மனைவியை விவாகரத்து செய்து விட்டார். இந்த நிலையில், மிலிந்த் சோமனுக்கும் அசாமைச் சேர்ந்த அங்கிதா கொன்வர் என்ற 26 வயது பெண்ணுக்கும் 4 வருடங்களுக்கு முன்பு சென்னையில் உள்ள இரவு விடுதியில் நட்பு ஏற்பட்டுள்ளது. பின்னர் அது காதலாக மலர்ந்தது. இந்த நிலையில், மிலிந்த் சோமனுக்கும் அங்கிதா கொன்வருக்கும் மும்பையில் நேற்றுமுன்தினம் திருமணம் நடந்தது. இதில் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

இந்தத் திருமணத்துக்கு மகள் வயதுப் பெண்ணை மணக்கலாமா? என்று விமர்சனங்கள் கிளம்பின. இதற்கு "மகள் வயதுப் பெண்ணுடன் காதல் திருமணமா? என்று கேட்கிறார்கள். மற்றவர்கள் பேசுவது பற்றி எனக்குக் கவலை இல்லை. அவர்களுக்கு எங்கள் காதல் பற்றி எதுவும் தெரியாது" என மிலிந்த் சோமன் பதில் அளித்துள்ளார். (ஆ)

# ஜப்பான் மூதாட்டி 117 வயதில் சாவு!



டோக்கியோ, ஏப்.24

உலகின் மிகவும் மூத்தவரான ஜப்பான் நாட்டைச்சேர்ந்த நபி தஜிமா, தனது 117 ஆவது வயதில் காலமானார்.

உலக சாதனைகளைப் பதிவு செய்துவரும் கின்னஸ் புத்தகத்தில் உலகின் மிகவும் முதிய மூதாட்டியாக இடம் பிடித்து இருந்தவர் நபி தஜிமா.

ஜப்பான் நாட்டை சேர்ந்த இவர் 1900 ஆம் ஆண்டு பிறந்தார். 19 ஆம் நூற்றாண்டில் பிறந்து, உயிருடன் இருக்கும் ஒரே நபராகக் கருதப்பட்ட இவருக்கு மகன்கள் மற்றும் மகள்கள் மூலம் பிறந்த 160 வாரிசுகள் உள்ளனர்.

ஜப்பான் நாட்டின் தென்பகுதியில் உள்ள கிக்காய் நகரில் வாழ்ந்துவந்த நபி தஜிமா, உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, கடந்த ஜனவரி மாதத்தில இருந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

இந்த நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்ததாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர். (ஆ)

# ராணி எலிசபெத்தின் 92 ஆவது பிறந்தநாள்

லண்டன், ஏப்.24

பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் தனது 92 ஆவது பிறந்தநாளை நேற்றுமுன்தினம் கலை நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாகக் கொண்டாடி உள்ளார்.

இரண்டாம் எலிசபெத் ஐக்கிய இராச்சியம் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியல் சட்டப்படியான அரசியாக உள்ளார். அனைத்து நாடுகளுக்கும் இவர் தனித்தனியே வெவ்வேறு பெயர்களில் ஆட்சிப் பெயர்களைக் கொண்டிருந்தாலும், லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கிறார்.

எலிசபெத் 1926 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி லண்டனில் பிறந்தார். இவர் 1947 ஆம் ஆண்டு எலிசபெத் எடின்பரோ கோமகன் பிலிப்பை மணந்தார். இவர்களுக்கு நான்கு பிள்ளைகள் உள்ளனர். இளவரசர் சார்ள்ஸ், இளவரசி ஆன், இளவரசர் ஆண்ட்ஷ, மற்றும் இளவரசர் எட்வர்ட். ஆகியோர் மூலமாக எட்டுப் பேரப் பிள்ளைகளும் உள்ளனர்.

இந்த நிலையில், ராணி இரண்டாம் எலிசபெத் தனது 29ஆவது பிறந்தநாளை கொண்டாடி உள்ளார். வழக்கமாக ராணி தமது பிறந்தநாளைத் தனிப்பட்ட முறையில் கொண்டாடுவார். ஆனால், இம்முறை பிரபல பாடகர்கள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சியோடு கொண்டாடி உள்ளார். (ஆ)

# பஞ்சாப்பிடம் பஞ்சாகப் பறந்த டெல்லி



புதுடெல்லி, ஏப்.24

டெல்லி அணிக்கு எதிரான ஐ.பி. எல் போட்டியில் தடுமாற்றமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்திய பஞ்சாப் அணி, பந்து வீச்சில் சிக்கனம் காட்டி ஐந்தாவது வெற்றியைச் சுவைத்தது.

புது டெல்லியில் நேற்று நடைபெற்ற போட்டியில் பஞ்சாப் அணியும், டெல்லி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

கடந்த 3 போட்டிகளில் கலக்கி பஞ்சாப்புக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்த கிறிஸ் கெய்லுக்கு நேற்று ஓய்வு தரப்பட்டது. 19 வயது உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த இந்திய அணிக் கப்டன் பிரிதிவி ஷா டெல்லி அணியில் அறிமுகம் ஆனார். தவிர, அமித் மிஸ்ரா, அவேஸ் கானும் டெல்லி அணியில் சேர்க்கப்பட்டனர்.

பஞ்சாப் அணிக்கு லோகேஷ் ராகுலுடன், இம்முறை பிஞ்ச் தொடக்க வீரராகக் களமிறங்கினார். இவர் 2 ஓட்டங்களோடு அவுட்டாகி, அதிர்ச்சி கொடுத்தார். பவுல்ட் பந்தில் பவுண்டரி அடித்த ராகுல், அவேஸ் கான் பந்தை சிக்ஸருக்கு அனுப்பினார். இவர், 15 பந்தில் 23 ஓட்டங்களில் வீழ்ந்தார்.

பவுல்ட் ஓவரில் இரு பவுண்டரிகள் விளாசிய மயங்க் அகர்வால் (21ஓட்டங்கள்),நீடிக்கவில்லை. பின், கருண் நாயர், யுவராஜ் சிங் இணைந்தனர். வழக்கம் போல தடுமாறிய யுவராஜ் சிங், ஒரு பவுண்டரி மட்டும் அடித்த திருப்தியுடன் 14 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

அடுத்த சில நிமிடங்களில் கருண் நாயரும் (34 ஓட்டங்கள்) அவுட்டானார். மிஸ்ரா பந்தில் சிக்ஸர் அடித்த மில்லர், 19 பந்தில் 26 ஓட்டங்கள் எடுத்து, பெவிலியன் கிளம்பினார். கடைசி ஓவரில் அஷ்வின் (6), அன்ட்ரூடை (3) அவுட்டாக, பஞ்சாப் அணி, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது.

டில்லி அணி சார்பில் பிளங்கட் 3, பவுல்ட் 2, அவேஸ் காவன் 2 விக்கெட் வீழ்த்தினர்.

பின்னர் மிக இலகுவான இலக்கைத் துரத்திய டெல்லி அணியின் முன்னணி வீரர்கள் கை கொடுக்காததால், ஓட்டங்களை எடுக்கத் திணறியது. பஞ்சாப் வீரர்களும் சிறப்பாகப் பந்து வீசி ஓட்டங்களைக் கட்டுப்படுத்தினர். ஆயினும் கடைசி வரை ஸ்ரேயாஸ் பஞ்சாப் அணிக்குச் சவாலாக இருந்து ஓட்டங்களைக் குவித்தார். கடைசி ஓவரின் கடைசிப் பந்தில் 5 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற பரபரப்பான நிலையில், பந்தை சிக்ஸருக்கு அடிக்க முயன்று ஸ்ரேயாஸ் ஆட்டமிழக்க, பஞ்சாப் அணி 4 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. டெல்லி அணி சார்பாக பிரிதிவிஷா 22, காம்பீர் 4, மக்ஸ்வெல் 12, ரிஷப் பண்ட் 4,டானியல் கிறிஸ்ரியன் 6, ரேவ்ரியா 24, ஸ்ரேயாஸ் ஐயர் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் ரஜ்புட், முஜீப் ரஹ்மான், ரை ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.ஆட்டநாயகனாக ராஜ்புட் தெரிவானார். (அ)



# மற்றொரு சாதனை!

யாழ்ப்பாணம், ஏப். 24

கோலூன்றிப் பாய்தலில் ஏற்கனவே, பல தேசிய மட்ட சாதனைகளைப் படைத்துள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனித்தா நேற்றும் மற்றொரு சாதனையைப் படைத்துள்ளார்.

இளையோருக்கான தேசியமட்டப் போட்டிகளில், கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற 23 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜெ.அனித்தா பங்கேற்றார்.

இந்தப் போட்டியில் அனித்தா, 3.55 மீற்றர் உயரத்தைக் கடந்து, தங்கப் பதக்கத்தைச் சுவீகரித்ததுடன், கடந்த ஆண்டு தான் படைத்த 3.48 மீற்றர் என்ற சாதனையையும் முறியடித்துள்ளார். (ஐ-20)

# மீண்டும் அனா புஞ்சிஹேவா?

கொழும்பு, ஏப். 24

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர், அனா புஞ்சிஹேவா எதிர்வரும் மே 9ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை கிரிக்கெட் சபைத் தேர்தலில் போட்டியிடுவார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1996ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய சமயத்தில், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக அனா புஞ்சிஹேவா செயற்பட்டிருந்தார்.

எனினும் அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் திலங்க சுமத்திபாலவிடம் தோல்வியடைந்த அனா, கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக கோல்ப் விளையாட்டில் அவர் ஆர்வம் காட்டினார்.

எனினும் எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள கிரிக்கெட் நிறுவனத் தேர்தலில் போட்டியிடுமாறு பல்வேறு தரப்பினரும் அனா புஞ்சிஹேவாவை கோரி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும் இதுத் தொடர்பில் தாம் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லையென அனா புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (அ)






# மன்செஸ்டர் இறுதிக்குத் தகுதி

லண்டன், ஏப்.24

இங்கிலாந்து உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான, விலகல் முறையிலான உதைபந்தாட்ட சங்கச் சவால் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்கு, பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் தகுதிபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதிப் போட்டியில், இன்னொரு பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸை வென்றே இறுதிப் போட்டிக்கு மன்செஸ்டர் யுனைட்டெட் தகுதிபெற்றுள்ளது.

இப்போட்டியை வேகமாக ஆரம்பித்த டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸ், தமதணியின் கிறிஸ்டியன் எரிக்சனின் உதையை அவரின் சக வீரர் டெலே அல்லி போட்டியின் 11ஆவது நிமிடத்திலேயே கோலாக்க ஆரம்பத்திலேயே முன்னிலை பெற்றது.

எனினும்மன்செஸ்டர்யுனைட்டெட்டின் போல் பொக்பா கொடுத்த பந்தை, போட்டியின் 24ஆவது நிமிடத்தில் அவரது சக வீரர் அலெக்ஸிஸ் சந்தேஸ் முட்டிக் கோலாக்க கோல் எண்ணிக்கையை மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

இந்நிலையில், முதற்பாதி முடிவடையும் தருணத்தில், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸின் எரிக் டயர் கோல் கம்பத்தை நோக்கி உதைந்த பந்தொன்று, மன்செஸ்டர் யுனைட்டெட்டின் பின்கள வீரர் கிறிஸ் ஸ்மோலிங்கில் பட்டு கோல் கம்பத்தில் பட்டுத் திரும்ப, 1-1 என்ற கோல் கணக்கிலேயே முதற்பாதி முடிவடைந்தது.

பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில், போட்டியின் 62ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டின் அன்டர் ஹெரேரா பெற்ற கோலோடு, போட்டியின் இறுதியில் 2-1 என்ற கோல் கணக்கில் வென்ற மன்செஸ்டர் யுனைட்டெட், 20ஆவது தடவையாக உதைபந்தாட்டச் சங்க சவால் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுக் கொண்டது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 24.04.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.